<u>**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**</u>

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 167/2025 | எ.ம.சா. | :1 |
| பெயர் | திரு. மதன்குமார் | | |
| த/பெ. | : திரு. நாராயணன் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 32 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட உதவியாளராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். TN 24 AE 5519 வாகனத்தின் காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நேரில் பார்க்கவில்லை ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியமளிக்கிறேன். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். மனுதாரருக்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் TN 24 AE 5519 வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால்

சரிதான்.  1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.  மனுதாரர் கேட்டுள்ள இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர்கள் மூவரும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.